Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 7-5-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Sell Groundnut on harvest

India is one of the largest producers of groundnut in the world. Groundnut is popularly known as peanut in many countries. In addition to oil extraction, it is used for making edible products for human consumption, protein rich meal, and fodder for livestock. Import of vegetable oil is expected to increase to 9.7 million tonnes during 2012-13 in India. The import estimate consists of 7.6 million tonnes of palm oil, 1.1 million tonnes of soya oil, 1 million tonne of sunflower oil and 10,000 tonnes of other edible oils.

Total world production of groundnut in 2012-13 may amount to approximately 37.19 million tonnes (2011-12: 35.33 million tonnes). China, India, United States, Nigeria, Burma, Argentina and Indonesia are the major producers of groundnut seeds globally.

In India, groundnut production in Kharif (2012-13) was 26.20 lakh tonnes and the same was 41.75 lakh tonnes in Rabi 2011-12. The major producers of groundnut are Gujarat (26.34 %), Andhra Pradesh (19.08 %), Rajasthan (17.68 %), Tamil Nadu (9.54 %), Karnataka (7.63 %), Madhya Pradesh (7.25 %) and Maharashtra (5.34). The area under groundnut in Tamil Nadu was 2.50 lakh hectares with a production of 3.50 lakh tonnes during Kharif 2012-13. The major groundnut producing districts are Thiruvannamalai (16.67 per cent), Villupuram (11.61 per cent), Vellore (10.58 per cent), Namakkal (7.15 per cent), Salem (5.31 per cent) and Erode (4.70 per cent).

Thaipattam is one of the major sowing seasons for groundnut in Tamil Nadu. The Thai Pattam sown crop is being harvested now. Thai Pattam sown groundnut kernels are mostly preferred by traders for its quality, dryness etc., About 60 percent of kernels are used for oil extraction and 30% - 40% for confectionary and other purpose. Pattani (TMV 10) variety is mostly grown for oil purpose. TMV2, TMV7, VRI1, VRI2 and JL24 varieties are used for confectionary purpose. Red groundnut (TMV13) is used for both oil and confectionary purpose. Generally all varieties are used for export but the grain should be bold sized. Specially VRI2, JL24, Asha, CO3, and CO4 varieties are exported for the purpose of salted nuts, blanched nuts, groundnut split and butter.

Farmers are interested in knowing whether price will increase in future so that they can store and sell the produce. To help them, to take a right decision, the NAIP-Domestic and Export Market Intelligence Cell functioning in Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 20 years prices that prevailed in Tindivanam Regulated Market. The econometric analysis and market surveys revealed that during April - May 2013 farmers could get a price of Rs 5800-6150/qtl of groundnut kernel at Regulated market, Tindivanam in Villupram district for oil purpose. It will be Rs.6000 to 6200 for confectionery purpose. There will be marginal increase in price during the next two months. That increase will meet only the interest and dryage loss only. Hence, farmers are recommended to sell groundnut on harvest. Currently harvest is going on in Thiruvannamalai, Thirukovilur, Tindivanam regions and this forecast is mainly meant for the groundnut being harvested in these regions.

**For details contact:**

Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore - 641 003.
Phone: 0422-2431405

**For Technical Details please contact:**

Professor and Head,
Department of Oil Seeds,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641 003.
Phone No: 0422-2450812

Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**<u>நிலக்கடலை பருப்பு விலை நிலையாக இருக்கும்</u>**

உலகளவில் எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலை ஒரு முக்கியப் பயிராகும். இது வேர்க்கடலை என்றும் அழைக்கப்படுகிறது. எண்ணெய் பிரித்தெடுத்தல் தவிர உணவுப்பொருள் தயாரிக்கவும் புரதம் நிறைந்த உணவு மற்றும் கால்நடைத் தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்தியாவில் சமையல் எண்ணெய் இறக்குமதி 2012-13ம் ஆண்டில் 9.7 மில்லியன் டன்கள் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் பாமாயில் 7.6 மில்லியன் டன்கள், சோயா எண்ணெய் 1.1 மில்லியன் டன்கள், சூரியகாந்தி எண்ணெய் 1 மில்லியன் டன் மற்றும் இதர எண்ணெய் வகைகள் 10,000 டன்களாக இருக்கும் என வர்த்தக ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

உலகளவில் 2012-13ம் ஆண்டில் மொத்த நிலக்கடலை உற்பத்தி சுமாராக 37.19 மில்லியன் டன்களாகும். 2011-12ம் ஆண்டில் இதன் உற்பத்தி 35.33 மில்லியன் டன்கள் மட்டுமே. சீனா, இந்தியா, அமெரிக்கா, நைஜிரியா, பர்மா, அர்ஜென்டீனா மற்றும் இந்தோனேஷியா, ஆகிய நாடுகள் நிலக்கடலை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்தியாவில் 2012-13ம் ஆண்டு கரீப் பருவத்தில் நிலக்கடலை உற்பத்தி 26.20 இலட்சம் டன்களாகும். ஆனால் 2011-12ம் ஆண்டு கரீப் பருவத்தில் 41.75 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. குஜராத் (26.34 சதவீதம்), ஆந்திரப் பிரதேசம் (19.08 சதவீதம்), இராஜஸ்தான் (17.68 சதவீதம்), தமிழ்நாடு (9.57 சதவீதம்) கர்நாடகம் (7.63 சதவீதம்), மத்தியப் பிரதேசம் (7.25 சதவீதம்) மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் நிலக்கடலை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் 2012-13ம் ஆண்டில் கரீப் பருவத்தில் நிலக்கடலையின் சாகுபடிப் பரப்பளவு 2.50 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி 3.50 இலட்சம் டன்களாகவும் இருந்தன. திருவண்ணாமலை (16.67 சதவீதம்), விழுப்புரம் (11.61 சதவீதம்), வேலூர் (10.58 சதவீதம்), நாமக்கல் (7.15 சதவீதம்), சேலம் (5.31 சதவீதம்) மற்றும் ஈரோடு (4.70 சதவீதம்) ஆகியன நிலக்கடலை உற்பத்தியில் முக்கிய மாவட்டங்களாகும்.

தமிழ்நாட்டில் தைப்பட்டம் நிலக்கடலை விதைப்புக்கு மிக முக்கியமானது ஆகும். தைப்பட்டத்தில் விதைத்த நிலக்கடலை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது. நல்லதரம் மற்றும் உலர்தன்மை போன்ற காரணங்களால் தைப்பட்டத்தில் விதைத்த நிலக்கடலை வியாபாரிகள் மத்தியில் பெரிதும் அதிகளவில் விரும்பப்படுகிறது. இதில் 60 சதவீதத்திற்கு மேல் எண்ணெய் பிழிவதற்கும் மற்றும் 30-40 சதவீதம் மிட்டாய் மற்றும்

இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பட்டாணி (டி.எம்.வி 10) இரகம் பெரும்பாலும் எண்ணெய்த் தேவைக்காக பயிரிடப்படுகிறது. டி.எம்.வி2, டி.எம்.வி7, வி.ஆர்.ஐ1, வி.ஆர்.ஐ2 மற்றும் ஜே.எல்.24 இரகங்கள் மிட்டாய், பர்பி போன்ற இனிப்புகள் தயாரிப்புக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. சிவப்பு நிலக்கடலை (டி.எம்.வி-13) மேற்கூறிய இரண்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக எல்லா இரகங்களும் ஏற்றுமதியும் செய்யப்படுகின்றன, ஆனால் அதற்கு பருப்பு பருமனாக இருக்க வேண்டும். வி.ஆர் ஐ2, ஜே.எல்24, ஆஷா, கோ3 மற்றும் கோ4 ஆகிய இரகங்கள் உப்புக் கடலைக்கும், வேகவைத்த கடலைக்கும், உடைத்த கடலைக்கும் மற்றும் வெண்ணெய் தயாரிப்பதற்காகவும் பிற நாடுகளில் பெரும் அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

விலை ஏறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதா என்பதைத் தெரிந்து கொண்டு அதன் மூலம் நிலக்கடலையை இருப்பு வைத்து விற்கலாமா என்று விவசாயிகள் ஆலோசனையில் உள்ளனர். எனவே சிறந்த முடிவுகளை விவசாயிகள் எடுக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைத் தகவல் மையம், திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 20 வருடங்களாக நிலவிய நிலக்கடலை விலைகளை ஆய்வு செய்தது. சந்தை ஆய்வு முடிவுகளின் படி ஏப்ரல் மற்றும் மே 2013 ம் ஆண்டில் எண்ணெய் நிலக்கடலைப் பருப்பின் விலை குவிண்டாலுக்கு ரூ.5800-6150 ஆகவும், மிட்டாய் வகைப் பருப்பின் விலை குவிண்டாலுக்கு ரூ.6000 முதல் 6200 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு மாதங்களில் நிலக்கடலை விலையில் சிறிய அளவில் ஏற்றம் இருக்கும். எனினும் உலர வைத்தல் மற்றும் சேமிப்பதற்கான செலவுகளை ஒப்பிடுகையில் இலாபம் கிடைக்க வாய்ப்பு இல்லை. எனவே விவசாயிகள் நிலக்கடலையை இருப்பு வைக்காமல் அறுவடை செய்த உடன் விற்குமாறு பரிந்துரைக்கப் படுகின்றனர். மேற் கண்ட விலை முன்னறிவிப்பு தற்போது நிலக்கடலை அறுவடை நடைபெறும் திருவண்ணாமலை, திருக்கோவிலூர் மற்றும் திண்டிவனம் ஆகிய பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405

**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்